**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : C.C. No. 30/2018

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution PW1

Defence

Court

Name : சுசீலா

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 04.12.2019

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது நிலக்கோட்டை, அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். கடந்த 12.09.2016 அன்று அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்த போது காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில் சார்பு ஆய்வாளர் சுமதி, முதல் நிலை காவலர் 826 சதீஷ்குமார் மற்றும் நான் ஆகியோர் மது விலக்கு சம்மந்தமாக ரோந்து சென்ற போது பள்ளப்பட்டி பிரிவில் ஆஜர் எதிரி பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த பெருமாயி க/பெ. அம்மாசி என்பவர் தனது வீட்டின் அருகே கட்டைப்பையுடன் நின்று கொண்டிருந்தார். அவரிடம் சார்பு ஆய்வாளர் உங்களை சோதனை செய்ய வேண்டும் அதற்காக அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ அல்லது அரசு அலுவலர் முன்போ சோதனை செய்ய கேட்க உரிமையுள்ளது என்று கூற ஆஜர் வேண்டாம் என்றும் தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார். சார்பு ஆய்வாளர் எதிரியிடமிருந்த கட்டைபையை வாங்கி சோதனை செய்தார் அதில் உலர் நிலையில் கஞ்சா இருந்தது அதனை எடை போட்ட

போது அது 1 கிலோ 500 கிராம் கஞ்சா இருந்தது. அதில் சார்பு ஆய்வாளர் 50 கிராம் கஞ்சாவை வேதியல் பகுப்பாய்விற்காக தனியே எடுத்து போலீஸ் பட்டன் சீல் வைத்தும், மீதமுள்ள 1 கிலோ 450 கிராம் கஞ்சாவை தனியே கட்டியே போலீஸ் பட்டன் சீல் வைத்தும், சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார். தனிநபர்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால் அதில் நானும், முதல் நிலை காவலர் சதீஷ்குமாரும் சாட்சி கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1. ஆகும். அதன் பிறகு எதிரி மற்றும் சொத்துக்களுடன் காவல் நிலையத்திற்கு வந்தோம். எதிரி மீது சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு நான் உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

12.09.2016 அன்று எத்தனை மணியிலிருந்து நிலைய பொறுப்பில் இருந்தேன் என்றால், காலை 8.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்து விட்டேன். தகவல் தெரிந்து தான் ரோந்து சென்றோமா என்றால், ஆம். சம்பவத்தன்று சிலுக்குவார் பட்டிக்கு போய்விட்டு பள்ளப்பட்டிக்கு சென்றோம். எனக்கு பள்ளப்பட்டி விளக்கிற்கும் கவுண்டன் பட்டி விளக்கிற்கும் வேறுபாடு தெரியும். அந்த இடத்தில் ராமன்செட்டிபட்டி விளக்கு இல்லை என்றால், சரிதான். ஆய்வாளருக்கு எனக்கு தனிப்பட்ட உத்தரவு எதுவும் கொடுக்கவில்லை, சார்பு ஆய்வாளர் அழைத்தன் பேரில் சென்றேன். எனது வாக்குமூலத்தில் காவல் ஆய்வாளர் உத்தரவுப்படி சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். சம்பவத்தன்று எங்களுக்கு தகவல் எதுவும் வரவில்லை என்றும், நாங்கள் ரோந்திற்கு போகவில்லை என்றாலும், சரியல்ல. எதிரியின் வீட்டைச்சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால், சரிதான். எனது வாக்குமூலத்தில் நாங்கள் தனிநபர்களை அழைத்து யாரும் வரவில்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். அதே போல் கஞ்சா எந்த தராசின் மூலம் எடைப்போடப்பட்டது என்றும், அத்தாட்சியை யார் எழுதினார்கள் என்றும் சொல்லவில்லை என்றால், சரிதான். மாதிரியை எடுத்தற்கு பிறகு தான் அத்தாட்சி தயார் செய்தோம். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றும், எதிரியை நாங்கள் பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், சார்பு ஆய்வாளர் பதிவு செய்த பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.